*புதுச்சேரி அரசு*
*துணைநிலை ஆளுநர் செயலகம்*

***No. LGS/PRO/2021*** ***02 மே, 2021***

# <u>பத்திரிகை செய்தி</u>

புதுச்சேரி எல்லைபிள்ளைச்சாவடியில் அமைந்துள்ள ராஜிவ்காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் சிகிச்சைக்கு வரும் கர்ப்பிணிப் பெண்களிடம் கொரோனா சான்றிதழ் கேட்டு திருப்பி அனுப்பப்படுகிறார்கள். இதனால் பரிசோதனை செய்து கொள்வதற்காக, பெண்கள் அரசு மருத்துவமனைகளுக்குச் சென்று காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கிறது. எனவே, ராஜிவ்காந்தி மகளிர் மருத்துவமனையில் கொரோனா பரிசோதனை மையம் அமைக்க துணைநிலை ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இன்றைய நாளிதழில் வெளியான செய்தியை அடுத்து மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் இன்று (02-05-2021) ராஜிவ்காந்தி மகளிர் மருத்துவமனையை ஆய்வு செய்தார். சுகாதாரத்துறைச் செயலர் திரு. அருண் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் சுஜாதா ஆகியோர் உடனிருந்தனர். மருத்துவமனை கண்காணிப்பாளர் மற்றும் மருத்துவர்களிடம் ஆலோசனை நடத்திய துணைநிலை ஆளுநர் நடைமுறை சிக்கல்கள் குறித்து கேட்டறிந்தார்.

- சிகிச்சைக்கு வருபவர்களை அலைகழிக்க வேண்டாம். அவர்களுக்கு சிரமங்கள் ஏற்படாமல் பார்க்க வேண்டும். பரிசோதனை செய்யப்படவில்லை என்பதற்காக யாரையும் திருப்பி அனுப்பவோ மருத்துவமனையில் சேருவதை மறுக்கவோ கூடாது.

- மருத்துவமனை வளாகத்தில் உடனடியாக, கர்ப்பிணிப் பெண்களுக்கான கொரோனா பரிசோதனை மையம் ஒன்று அமைக்க வேண்டும். நாளை முதல் அது செயல்படுவதாக இருக்க வேண்டும். பரிசோதனை முடிவுகளை உடனடியாக வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- அவசர சிகிச்சைக்கு வருபவர்களுக்கு உதவி செய்ய ஊழியர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். அதனைக் கண்காணிக்க வேண்டும்.

- மருத்துவமனைக்கு வருபவர்களிடம் துண்டு பிரசுரங்கள் மூலமாக கொரோனா குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.